**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.53/2022 - PW-4**

| | |
|---|---|
| Name | திரு.எழிலன் |
| Husband/Father Name | திரு.பன்னீர் செல்வம் |
| Village /Area | மாந்தாங்கல் |
| Taluk | வாலாஜா |
| Occupation | கிளை மேலாளர் IDFC First Bank, Vellore |
| Age | 34 |
| Religion | -- |
| ID Card No. | 169244 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 02.07.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது IDFC First Bank, வேலூரில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு இந்நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையை நான் பெற்றுக்கொண்டேன். இந்த வழக்கின் பிரதிவாதி சேர்மராஜன் என்பவர் எங்கள் வங்கியில் அவரது சொத்தின் பேரில் கடன் வாங்கியிருந்தார். சேர்மராஜன் என்பவர் பெயரில் 16.11.2021 தேதியிட்ட 452808 எண் கொண்ட கேட்பு காசோலை ரூ.13,50,000/- மற்றும் சேர்மராஜன் என்பவர் பெயரில் 18.11.2021 தேதியிட்ட 452823 எண் கொண்ட கேட்பு காசோலை ரூ.9,50,000/- மற்றும் சேர்மராஜன் என்பவர் பெயரில் 26.10.2021 தேதியிட்ட 452714 எண் கொண்ட கேட்பு காசோலை ரூ.10,00,000/- ஆகிய தொகைகள் எங்கள் வங்கிக்கு வரப்பெற்று அந்தத் தொகைகள் சேர்மராஜன் பெற்றிருந்த கடனுக்கு வரவு வைக்கப்பட்டது. 26.10.2021 தேதியிட்ட 452714 கேட்பு காசோலை தொகை ரூ.10,00,000/-ல் அவர் கடன் தொகையை சரிவர செலுத்தாததால் எங்கள் வங்கியால் கணக்கிடப்பட்ட தண்டத்தொகைக்காக ரூ.4,68,267/- வரவு வைக்கப்பட்டது. அந்த 10 லட்சத்தில் மீதித்தொகையை ரூ.5,31,733/- அவரது கடன் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, கடனை மொத்தமாக பைசல் செய்யப்பட்டது. சேர்மராஜன் பெயரிலுள்ள கடன் கணக்கிற்கான பட்டியல்

உண்மை நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.

(பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகவில்லை. பிரதிவாதி அழைத்தும் ஆஜரில்லை. எனவே பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என பதிவு செய்யப்படுகிறது.)

Sd/-A.Balakrishnan
I Additional District Judge,
Ranipet.